செ.வெ.எண்.348 நாள்.31.05.2018.

**திருநெல்வேலி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை இயற்கை இன்னல்கள் பாதுகாப்பு குறித்த முன்னேற்பாடுகள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 2018 ஆம் ஆண்டில் தென்மேற்கு பருவமழை ஜீன் மாதம் முதல் தொடங்குவதை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடன் முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று **(31.05.2018)** நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 15 வட்டங்களுக்கு உட்பட்ட இடங்களில் மழைக்காலங்களில் அதிக பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்கள் என கண்டறியப்பட்டுள்ள 125 பகுதிகளுக்கும் உள்வட்ட வாரியாக அமைக்கப்பட்ட மண்டல குழுக்கள் (Zonal Teams), முன்னெச்சரிக்கை தகவல் அளிக்கும் குழு (Early Warning Committee), தேடுதல் மற்றும் மீட்பு குழு (Search and Rescue, Evacation Committee), நிவாரண மையம் மேலாண்மை குழு (Relief and Centre Management Committee) மற்றும் அரசு சாரா அமைப்புகளைச் சார்ந்த நபர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரால் தென்மேற்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மழை மற்றும் இயற்கை இன்னல்கள் ஏற்படும் காலங்களில் பாதிக்கப்படும் பொதுமக்களை தங்க வைக்க 261 பள்ளிகள் மற்றும் சமுதாய கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும், மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை, காவல்துறை, தீயணைப்புத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்வாரியத்துறை, பொதுப்பணித்துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரப்பணிகள் துறை மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் தயார்படுத்தப்பட்டுள்ளனர். கோட்ட அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்திட சார் ஆட்சியர் / கோட்டாட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் சார் ஆட்சியர் / கோட்டாட்சியர்கள் தலைமையில் மண்டல குழுக்கள், முதல் நிலை மீட்பாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு பேரிடர் சமயங்களில் ஆற்ற வேண்டிய பணிகளின் இன்றியமையாமை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மழை மற்றும் இயற்கை இடர்பாடுகளால் பாதிப்பு ஏற்படும் போது மாவட்ட அவசரகால செயல் மையத்தில் செயல்பட்டுவரும் கட்டுப்பாட்டு அறைக்கு பொதுமக்கள் இலவச தொலைபேசி எண் 1077 -க்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். இக்கட்டுப்பாட்டு மையம் 24 மணிநேரமும் செயல்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, தென்காசி கோட்டாட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன், மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் திரு.ஹரிஹரன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின்அபுபக்கர், சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் திரு.இளங்கோ, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.செந்தில்வேல்முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன் உள்பட அனைத்து துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.